**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 115** **நாள்: 24.02.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் "The Bystander Action" - பார்வையாளர் தலையீடு குறித்த பயிற்சி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியின் பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் சார்பில், மாநகராட்சிப் பகுதிகளில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் "The Bystander Action" - பார்வையாளர் தலையீடு குறித்த பயிற்சி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (24.02.2026) வள்ளுவர் கோட்டம், அன்னை தெரசா வளாகத்தில் நடைபெற்றது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் மாநகராட்சியின் மூலமாக பல்வேறு நிகழ்ச்சிகள் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறாக, பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் சார்பில், பெண்கள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 5 நாட்கள் நடத்திட திட்டமிடப்பட்டு 23.02.2026 அன்று ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் விழிப்புணர்வு நிகழ்ச்சி தொடங்கி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, இன்று வள்ளுவர் கோட்டத்தில் உள்ள அன்னை தெரசா வளாகத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு பெண்கள் பாதுகாப்பில் ஒவ்வொரு குடிமக்களின் முன்முயற்சி மற்றும் பார்வையாளர் தலையீட்டின் அவசியத்தை எடுத்துரைத்தார். பின்னர், பார்வையாளர் தலையீட்டின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் தெரு நாடகம், கலை நிகழ்ச்சிகள் மூலமாக விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 200க்கும் மேற்பட்ட மாநகரப் போக்குவரத்து கழக ஓட்டுநர், நடத்துநர், மகளிர் சுயஉதவிக் குழு பெண்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் கலந்துக் கொண்டவர்களுக்கு பயிற்சி கையேடுகள் வழங்கப்பட்டது.

மேலும், உளவியல் நிபுணர் திருமதி வனுஜா அவர்கள் அவசர நேரங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் மனஅழுத்த நிலைகள் மற்றும் அந்நிலையில் எவ்வாறு பாதுகாப்பாகவும், ஆதரவாகவும் செயல்படுவது குறித்து எடுத்துரைத்தார்.

எழுத்தாளர் திருமதி லதா, அக்குவா ஆர்கனைஷேசன் திருமதி சுபா, நலம்தானா ஆர்கனைஷேசன் ஆகியோர்கள் மூலமாக பெண் குழந்தைகளின் பாதுகாப்பு சமூக பொறுப்புனர்வு குறித்து எடுத்துரைக்கப்பட்டு. இதன் தொடர்பாக விழிப்புணர்வு திரைப்படம் திரையிடப்பட்டது. தொடர்ந்து சமூக நலத்துறை மூலமாக பெண்களுக்கு வழங்கப்படும் நலத்திட்டங்கள், பெண்கள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து சமூகத்தின் ஒட்டுமொத்த பொறுப்பு என்பதையும், பார்வையாளர்கள் தலையீடு செய்வதன் மூலம் பாதுகாப்பான நகர சூழலை

உருவாக்க முடியும் என்பதையும் வலியுறுத்தும் வகையில் இந்நிகழ்ச்சி பயனுள்ளதாக அமைந்தது.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி பாலின மற்றும் கொள்கை ஆய்வக குழுத் தலைவர் முனைவர் லெஜிஸ், தகவல் தொடர்பு நிபுணர் திருமதி கிருத்திகா, செல்வி ஹம்சினி, செல்வி பூங்குழலி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**